**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP. 92/2023**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழன் கிழமை நீ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.த.பாரதி, பலகை எழுத்தர் நிலை –2 அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மருத்துவர்.எஸ்.திருசெல்வி | க/பெ.: | சசிகுமார் |
| கிராமம்: | திருவாரூர் | தாலுக்கா: | திருவாரூர் |
| மதம்: | இந்து | தொழில்: | உதவி பேராசிரியர், உடலியல் மருத்துவம் மற்றும் மறுவாழ்வுயியல் துறை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை |
| வயது: | 50 | முகவரி: | திருவாரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 12.03.2026

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது உதவி பேராசிரியர், உடலியல் மருத்துவம் மற்றும் மறுவாழ்வுயியல் துறை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அனுப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 24.02.2025 அன்று முருகையன் என்பவர் மெடிக்கல் போர்டில் ஆஜரனார். அவருக்கு எலும்பு முறிவு துறைக்கு கருத்துரை பெறுவதற்குகாக அனுப்பி வைத்தேன்.எலும்பு முறிவு மருத்துவர் மனுதாரர் முருகையன் என்பவரை பரிசோதனை செய்து , ஸ்கேன் எடுத்து பார்த்ததில் எந்த விதமான

எலும்பு முறிவும் இல்லை என்றும், சொற்ப காயம் என்பதால் மனுதாரர் முருகையனை பி.எம்.ஆர் குழுமத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் 03.03.2025–ல் எலும்பு முறிவு மருத்துவர் கொடுத்த கருத்துரையின் படி மனுதாரர் முருகையனை பரிசோதனை செய்து பார்த்தில் வலி இருப்பதாக சொன்னார். பின்னர் எலும்பு முறிவு மருத்துவர் வழங்கிய கருத்துரையின் படியும், இந்திய மருத்துவ வழிகாட்டுதலின் அடிப்படையிலும் மனுதாரர் முருகையனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு 2 சதவீதம் என நானும், மருத்துவர் குழுமத்தில் உள்ள மெம்பர்களால் உறுதி செய்து மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயத்திற்கு 2 சதவீதம் என சான்றிதழ் அளித்துள்ளோம். நான் வழங்கிய சான்றிதழ் **சா.சா.ஆ.1** ஆகும்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

சா.சா.ஆ.1 ஆவணத்தில் மனுதாரரரை எந்த எலும்பு முறிவு மருத்தவர் அனுப்பபட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். எலும்பு முறிவு மருத்துவர் வழங்கிய ரிபோர்டை நான் வழங்கிய சான்றுடன் இணைக்கவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.1 ஆவணத்தில் மனுதாரருக்கு எலும்பு முறிவு மருத்துவரால் எடுக்கப்பட்ட எக்ஸ்ரே பற்றி சொல்லவில்லை, அந்த எக்ஸ்ரே ஆவணத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு விபத்து ஏற்பட்ட பிறகு எங்கு அவர் மருத்துவசிகிச்சை பெற்று கொண்டார் என்ற விவரத்தை எனது சான்றிதழில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மனுதாரர் ஏற்கனவே சிகிச்சை பெற்றதற்கான ஆவணத்தை

நான் வழங்கிய சான்றிதழில் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரர் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மனுதாரர் 30.09.2019 முதல் 15.10.2019 வரை உள்நோயாளியாக திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்ற விவரத்தை நான் வழங்கிய சான்றிதழில் சொல்லவில்லை. எங்கள் மருத்துவகல்லூரி மருத்துவமனயைில் இருந்து மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை வாங்கி பார்க்கவில்லை. மனுதாரருக்கு எலும்பு முறிவு மருத்துவர் காயம் இல்லை என்று கொடுக்கப்பட்ட ஒப்பீனியன் அடிப்படையில் மனுதாரருக்கு 2 சதவீதம் இயலாமை என இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். மத்தியரசு சொன்ன வழிகாட்டுதலின்படி ஊனச்சான்று வழங்கியதாக நான் சொல்வதற்கு சரியான விவரம் எதும் தற்போது என்னால் சொல்ல இயலாது. ஊனச்சான்று வழங்குவது தொடர்பாக மத்தியரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் 16-18/97-N IV 1.06.2001, 18.02.2002 அதில் மருத்துவர்கள் எப்படி இயலாமை சான்றிதழ் வழங்கவேண்டுமென வழிகாட்டி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். படிவம் ஏ, படிவம் பி , அட்டவணை 1 முதல் 5 -ல் என்னென்ன முறைப்படி ஆய்வு செய்து ஊனச்சான்றிதழ் வழங்கவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 04.01.2018-ல் அதே துறையிலிருந்து ஒரு வழிகாட்டி சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்கள் என்றால் சரிதான். நான் வழங்கிய

சா.சா.ஆ.1 ஆவணத்தில் மேலே கண்ட வழிகாட்டில் கண்ட விதிமுறையின் படி இயலாமை சான்றிதழ் வழங்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழங்கிய சா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி வழிகாட்டுதலின் அடிப்படையில் சான்றிதழ் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆவணத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இடுப்பிற்கு கீழ் பகுதியிலிருந்து பாதம் வரை கீழ்முட்டுபகுதி. நான் வழங்கிய சா.சா.ஆ.1 ஆவணத்தில் மனுதாரரரை பரிசோதனை செய்தது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மத்திய அரசின் வழிகாட்டுதல் முறைகளை சரியாக பின்பற்றாமலும், எனது தொழில் நெறிமுறைகளை முறையாக பின்பற்றாமலும் மனுதாரரரை பரிசோதனை செய்யாமலும் சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்திய உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் ஆகிய வழிகாட்டுதலின் படி சான்றிதழ் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட ஊனம் காயச்சான்றிதழின் படி கொடுங்காயம் என திருத்துறைப்பூண்டி மருத்துவர் வழங்கியுள்ளார் என்றும், அதனால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் நிரந்தர ஊனம் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரரை பரிசோதனை செய்யாத நிலையில் நான் கொடுத்த சான்றிதழ் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.